2010 ஏப்ரல் 28]

கொடுக்க முடியவில்லையென்றால் எனக்குத் தகவல் சொன்னால், உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்கிறேன். அவர்கள் சென்று ஈரப்பதத்தைப் பார்த்து வாங்குவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

119—

கல்வெட்டுகள்

***106100—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல அரிய செய்திகளைத் தெரிவிக்கும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலும் மற்றும் அண்டை மாநிலமான கேரளாவிலும், 30 இடங்களில் 90 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 9 இடங்களில் உள்ள கல்வெட்டுகள் தொல்லியல் பாதுகாப்புச் சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையின் பாதுகாப்பில் உள்ளன. மேலும் ஐம்பை கல்வெட்டுகள் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைப்போன்று அரச்சலூர் இசைக் கல்வெட்டினைக் குத்தகைக்கு எடுக்கும் வகையில் உரிய திட்டக் கருத்துருக்கான ஆட்சேபனையின்மை வனத் துறையில் பெறும்வகையில், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் சான்று நிலுவையில் உள்ளது. 8 பிராமிக் கல்வெட்டுகள் மத்திய தொல்லியல் துறை பராமரிப்பிலும், 1 கல்வெட்டு கேரளா மாநிலத்திலும் உள்ளன. மீதமுள்ள கல்வெட்டுகளைத் தொல்லியல் துறையின்கீழ் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2010 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், அவையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்மொழி மாநாடு நடத்துகின்ற இந்த வேளையில், தமிழ்நாட்டில் ஆங்காங்கே இந்த பிராமிக் கல்வெட்டுகள் இருப்பதாகவும், ஓரிரு இடங்களில் தொல்லியல் துறையும், மத்திய அரசினுடைய அகழ்வாராய்ச்சித் துறையும் கண்டுபிடித்திருப்பதாகவும், இன்னும் பல இடங்களில் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதாகவும், கண்டுபிடித்த அந்த எழுத்துக்கள் எல்லாம் சரியான பாதுகாப்போடு அவற்றை பராமரிப்பதற்கான முயற்சிகள் இல்லாத காரணத்தால் அவை அழியும் நிலையில் உள்ளதாகவும் கூறுகின்றார்கள். அதேபோன்று, சாதாரண கல்வெட்டுகள் நம்முடைய தஞ்சை பெரிய கோயில், அரியலூர் ஜமீன், நம்முடைய உடையார்பாளையம் ஜமீன், பிச்சாவரம் ஜமீன், மதுரை நாயக்கர் மஹால் இன்னும் என்னுடைய திருவதிகையில் இருக்கின்ற கல்வெட்டுகள் எல்லாம் எந்த நூற்றாண்டில் எழுதப்பட்டன; எந்த நூற்றாண்டில் வடிக்கப்பட்டன என்பதுகூட தெரியாமல் இருக்கிறார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்தான் அந்தத் துறைக்கும் அமைச்சராக இருக்கின்றார். அவர் சிறப்பாக, 'கல்வெட்டு' என்கிற ஒரு சிற்றேட்டினையும் துறையின் சார்பாக வெளியிட்டு வருகின்றார்கள். அதையும் நான் படித்து வருகின்றேன். ஆக, அந்த வகையில், இந்த ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கும், இந்த பிராமிக் கல்வெட்டுகளைக் கண்டு பாதுகாப்பதற்கும், இன்னும் பிற இன வகை கல்வெட்டுகளை, வரலாற்றுச் சிறப்புடைய மன்னர்கள், நம்முடைய தமிழ் முன்னோர்கள் ஆண்ட, ஆட்சி செய்த அந்தப் பாரம்பரியத்தை உணர்த்தும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள்கூட உள்ளாட்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது இந்தக் குடவோலை முறையைக் குறிப்பிட்டு பதில் அளித்திருக்கிறார்கள்- சிறப்பிற்குரிய அந்தக் கல்வெட்டுகளையெல்லாம் பாதுகாப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் தமிழகத்திலே அதிகபட்சமாக மதுரை மாவட்டத்திலும், அதைப்போல விழுப்புரம் மாவட்டத்திலே, திருச்சி மாவட்டத்திலே, புதுக்கோட்டை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு மலைக் குகைகளில் காணப்படுகின்றன. இந்த பிராமிக் கல்வெட்டுகள் சமண முனிவர்கள் வாழ்ந்த இடங்களிலே காணப்படுகின்றன. அவர்கள், தாம் வாழ்ந்த படுக்கைகளை உருவாக்குகின்றபோது மழையினாலே அவை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இயற்கையாகவே மழைநீர் வடிந்து செல்வதற்குப் புருவம் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளதால், அதில் அந்தக் கல்வெட்டுகள் அமைந்து இயற்கையாகவே அதைப் பாதுகாக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அரச்சலூர் இசைக் கல்வெட்டினைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே காப்புக் காட்டுக்குள்ளாக இருக்கக்கூடிய காரணத்தால் அதுவும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இருக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் இரண்டு கல்வெட்டுகள் மாத்திரம்தான் இதுவரை சிதைவுற்ற நிலையில் இருக்கின்றன. ஒன்று, எடக்கல்லில், கேரளாவில் இருக்கக்கூடிய கல்வெட்டு. திருச்சியிலே கண்டெடுக்கப்பட்டு, படி எடுக்கப்பட்டு, பிற்காலத்திலே அழிந்துபோன ஒரு கல்வெட்டு. இதைத் தவிர அனைத்துக் கல்வெட்டுகளும் சிறப்பான முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு, 2006 முதல் 2010 வரை ஏறத்தாழ 7.8 கோடி ரூபாய் செலவில், 40 சின்னங்களைப் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கைகளை தொடர்ச்சியாக இந்த அரசு நான்கு ஆண்டுகளிலே மேற்கொண்டிருக்கிறது. அதன்வாயிலாக இந்தக் கல்வெட்டுகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. அவர் பல்வேறு கோயில்களில் இருக்கக்கூடிய கல்வெட்டுகள் குறித்து கேட்டார். இந்தக் கல்வெட்டுகள் பல்வேறு மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்துவருகின்றன. பிராமிக் கல்வெட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு பாண்டிய நாட்டிலே காணப்படுகின்ற வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இருக்கின்றன. அதற்குப் பிறகு, தொடர்ச்சியாகப் பல்வேறு மன்னர்களின் காலத்திலிருந்து இருக்கக்கூடிய கல்வெட்டுகள், தொடர்ச்சியாக புதுப்பிக்கக்கூடிய முயற்சியில் கல்வெட்டு முனைப்புத் திட்டம் என்கிற அந்த அடிப்படையில் தமிழகத்தில் ஏறத்தாழ 25 ஆயிரம் கல்வெட்டுகள்

காணப்படுகின்றன. அவற்றில் 23 ஆயிரம் கல்வெட்டுகள் படிக்கப்பட்டு, படி எடுக்கக்கூடிய அந்தப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. எனவே, தொடர்ச்சியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு, கல்வெட்டுகள் உரிய வகையிலே பாதுகாக்கப்படும். அதேபோன்று, ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே கீழ்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் என்றே இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி, அந்த நூலகத்தை, இப்போது சென்னையிலே அமைக்கப்பட்டு வருகிற அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்குக் கொண்டுவருவதன் மூலமாக அந்த ஓலைச் சுவடிகளை இன்னும் சிறப்பான வகையில், சரஸ்வதி மஹால் போன்று பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பிராமிக் கல்வெட்டுகளைப் பொறுத்தளவிலே, இந்தப் பெயர் ஒரு பிரெஞ்ச் அறிஞரால் சொல்லப்பட்டு, அதுவே இன்றைக்கு நடைமுறையிலே இருக்கிறது. திரு. சே. ராசு போன்ற கல்வெட்டு அறிஞர்களெல்லாம் இதை தமிழிக் கல்வெட்டுகள் என்றும், பழந்தமிழ்க் கல்வெட்டுகள் என்றும்தான் அழைக்க வேண்டும்; தமிழ்ப் பிராமி என்று அழைப்பது சரியல்ல என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, இந்தக் கல்வெட்டுகள் குகைகளிலும், அதிலும் குறிப்பாக சமணப் படுக்கைகள் இருக்கும் இடங்களிலே அமைந்திருக்கின்ற நிலையில், இன்றைக்கு சுரங்கத் துறையின் அனுமதி பெற்று கல் குவாரி எடுப்பவர்கள், அந்தக் கல்வெட்டுகள் அமைந்திருக்கின்ற இடங்களுக்கு மிக அருகில் கல் குவாரிகளை எடுக்கும்போது, அந்தக் கல்வெட்டுகள் பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இப்பொழுது இந்தியத் தொல்லியல் துறை, 400 மீட்டர் தூரத்திற்கு அருகிலே அந்தக் கல் குவாரிகளை அமைக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், 50 மீட்டர்

2010 ஏப்ரல் 28]

அளவு வரை எடுக்கலாம் என்று ஓர் அரசு உத்தரவு இருக்கின்ற நிலையைச் சுட்டிக்காட்டி, கல் குவாரி உரிமையாளர்கள் அந்தக் கல்வெட்டுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்ற அளவிற்குச் சென்றுகொண்டிருக்கின்ற நிலை இருக்கிறது. அண்மையிலே உயர் நீதிமன்றத்திலேகூட அந்த வழக்கு வந்திருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு நம்முடைய அரசு, இந்தியத் தொல்லியல் துறை ஏற்கெனவே அறிவித்துள்ள உத்தரவுப்படி 400 மீட்டர் வரைக்கும், அந்தக் கல்வெட்டுகள் இருக்கின்ற இடங்களுக்கு அருகிலே கல் குவாரிகளை அனுமதிப்பதில்லை என்ற ஒரு நிலையை எடுக்க முன்வருமா என்பதைக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராமி எழுத்துகளைப் பொறுத்தமட்டில், சிந்து எழுத்துக்களுக்குப் பிறகு இந்திய எழுத்துகளில் முதல்முறையாக உருவாக்கப்பட்ட எழுத்துகள் என்ற வகையில், அவை பிராமி எழுத்துகள் என்ற வகையில் அழைக்கப்படுகின்றன. அவற்றில் அசோகன் காலத்தில் உருவாக்கப்பட்ட அசோகன் பிராமி, அதற்குப் பிறகு மௌரிய பிராமி, பட்டுப் புரோலு பிராமி என்று வருகிறபொழுது, தமிழகத்தில் இருக்கக்கூடிய பிராமிக் கல்வெட்டுகள் தமிழ்ப் பிராமி என்ற முறையிலே இப்போது அழைக்கப்பட்டு வருகிறது. அவர் சொன்னதைப்போல, அதைத் தமிழி என்று அழைக்க வேண்டும் என்று சில அறிஞர்களிடத்திலே கருத்து இருப்பது உண்மை. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தக் காலத்தில் உருவாக்கப்பட்ட சமண, பௌத்த நூல்களான 'லலித விஸ்தர', 'பண்ணவான சுத்த' போன்ற பல்வேறு நூல்களிலேகூட, இது தமிழி அல்லது திராவிடி என்று அழைக்கப்பட வேண்டுமென்று குறிப்புகள் இருக்கின்றன. இருந்தாலும், தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் போன்றவர்கள் தமிழ்ப் பிராமி என்றே அழைக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் நிறுவியிருக்கிறார்கள். எனவே, நம்முடைய அறிஞர்களின் அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் தொடர்ச்சியாக தமிழ்ப் பிராமி என்ற முறையிலேயே தொல்லியியல் துறையிலும் அழைப்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

[2010 ஏப்ரல் 28

அடுத்து, மிக முக்கியமான ஒரு கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு பிராமிக்' கல்வெட்டுகள் இருக்கக்கூடிய இடங்களிலே, கனிமத் துறையின்மூலமாக அங்கே சுரங்கங்கள் வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறபோது, அந்தப் பிராமிக் கல்வெட்டுகள் அழியக்கூடிய நிலையில் இருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 1966 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களிலிருந்து 100 மீட்டர் தள்ளியிருக்கக்கூடிய பகுதி—prohibited area—அதாவது பாதுகாக்கப்பட்ட பகுதி. அதற்கு மேலே 200 மீட்டர் என்பது, regulated area என்று கொடுத்திருக்கிறார்கள். அதற்குள்ளாக எந்தப் பணிகளையும் செய்யக்கூடாது. ஆனால், சில இடங்களிலே இதற்கு மேலாகச் செய்யக்கூடிய கல் குவாரி பணிகளினால், மொத்தமாக இந்தப் பிராமிக் கல்லெழுத்துகள் இருக்கக்கூடிய பகுதிகளுக்கு, அங்கே இருக்கக்கூடிய கற்சிலைகளுக்கு ஆபத்து வந்திருக்கிறது. எனவே, இதைத் தடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், கடந்த 19-6-2009 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களுடைய தலைமையிலே ஒரு முக்கியமான கூட்டம் கூட்டப்பட்டு, பல்வேறு துறைத் தலைவர்களோடு இது ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்வெட்டுகள், சிலைகள் அமைந்திருக்கக்கூடிய முழு மலைப் பகுதியையும் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவித்து நடவடிக்கை எடுத்தால், இவற்றைக் காப்பாற்ற முடியும் என்ற நிலை இருக்கக்கூடிய காரணத்தினால், தொல்லியல் துறையின் சார்பாக அதைச் செய்வதற்கு முழுமையான முயற்சிகளை இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று அவற்றைச் செய்வதற்கான நடவடிக்கைகளை இந்தத் துறை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]